முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1497

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.11.2023**, சனிக்கிழமை

1. அறமாக வாழுகின்ற அண்ணலே
ஆறுமுகன் என் அவதார வள்ளலே
வரம்தந்து சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 18 ம் நாள், 04.11.2023, சனிக்கிழமை)
2. ஆசியதும் அரங்கன் திருவடி பற்றி
அகிலத்தில் தர்மம் வளர்ந்தால்
நேசமுள்ள மக்களாக உலகோர் மாறி
நீதிமான்களாய் இந்த உலகில் தர்மம் காத்து வருவர்
3. வருகவே அரங்கன் அவதார நோக்கமாக
வையகமெங்கும் தர்மம் வளர்ந்துநிற்க
வளர்ச்சிமிக்க ஞான பூமியாக
வையகம் மாற்றம் கண்டு இனிதே
4. இனிதே எங்கும் எதிலும்
எப்போதும் தர்மநெறி குன்றாதவண்ணம்
கனிவேலவன் யான் மகிழ விரும்ப
கலியுகத்தில் மாற்றங்கள் மிகுதி காணும்
5. காணவே அற்புதத்தை நடத்த
கல்கி அவதாரமாக அரங்கமகான்
ஞானம் கூட்டி உலகோர்க்கு
ஞானவழி தந்து அருளிவர
6. வருகவே அரங்கா முருகா என வையகத்தார் வணங்கி வந்தால் போதும்
தருகின்ற தர்மகுணம் பெருகி தயவான மக்களாக மாறி
மாறியே உலகினில் அற்புதத்தை நடத்தும்
மகத்துவமிக்க மகான்களாக மாற்றம்

7. மாற்றம் தனை யானே அவர்களுக்கு
மகான் அரங்கன் கரம்பட தீட்சைவழி இறங்கி அருளி
அருளியே உலகமாற்றம் நிகழ்த்துவேன்
அரங்கன் தொண்டர்களால் இந்த அற்புதத்தைப் படைப்பேன்

8. அன்னதனால் உலகோர் அரங்கன் வழி தொடர்ந்துவர
அகிலமெங்கும் ஒரு மாற்றம் கண்டு
ஞானவான்கள் நிறைந்த பூமியாக
ஞான ஆட்சித்தந்து மகிழக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–